**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2018**

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II, பிரிவு II (சீ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் சேவைகள் குழாயிடுவதற்கான அணுகுவழிகள் மற்றும் முன்னேற்றப்பட்ட சுகாதாரம் என்பவற்றினை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,840 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| அ) | நிதியளிப்பு உடன்படிக்கையின் 2.04 மற்றும் 2.05 ஆம் பிரிவகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் கணக்கிட வேண்டுமென வேண்டப்பட்ட மீளாய்வாண்டின் போது கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட வட்டி மற்றும் சேவைக் கட்டணங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | 199.17 | அரசாங்க பங்கிள்பபுகளின் குறைத்துக் கூறல் | அவசியமான சீராக்கல்கள் 2019 இல் செய்யப்படும். | செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தை பாதிக்கும் தவறுகளை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட கடன் பெறுகைகள் கடனளிக்கும் முகவரிடமிருந்து பெறப்பட்ட முற்பணமாக தவறாக கருதப்பட்டிருந்தது. | 1,670.31 | கடன் மீதிகளின் குறைத்துக் கூறல் | சகல திருத்தங்களும் 2019 இல் அனுமதிக்க வேண்டும். | எதர்வரும் ஆண்டுகளில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் திட்டங்கள், புனரமைப்பு நீர் | 97.67 | சுகாதார உட்கட்டமைப்புக்கான அபிவிருத்தி | 2019 இல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் செலவினங்களை வகைப்படுத்தவதற்கு உள்ளக கட்டுப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| வழங்கல் திட்டங்கள் மற்றும் நகர சுகாதார திடங்கள் பொன்றவற்றின் கீழ் ஏற்பட்ட அபிவிருத்தி கிரயங்கள் செயற்திட்டத்தால் அமுலாக்கபபட்ட கிராமிய மற்றும் பெருந்தோட்ட சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அபிவிருத்தி கிரயமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. | செலவுகள் அதிகரித்துக் கூறல் | | முறைமையை வலுப்படுத்துவதற்கான தேவை. |

**2.2. இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவெடுகளில் காட்டப்பட்ட ரூபா 4.72 மில்லியன் தொகையான கேகாலை, முல்லைத்தீவு மற்றும் மொனறாகலை மாவட்டகளிலுள்ள கணனிகள் மற்றும் உபபாகங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும பொருத்திகள் என்பவற்றின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த ரூபா 5.27 மில்லியன் தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மதிப்பீட்டின் உள்ள தன்மையை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2019 இல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நேரொத்த பதிவேடுகளுடன் மீதிகளை காலரீதியாக இணக்கம் செய்வதற்கான தேவை. |
| (ஆ) | செயற்திட்டத்தின் மாவட்ட ஆதார பிரிவால் பேணப்பட்ட பதிவெடுகளில் காட்டப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் கழிவு சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் கீழ் முறையே ரூபா 1.49 மில்லியன் மற்றும் ரூபா 18.82 மில்லியன் தொகையான சான்றுபடுத்திய சிவில் வேலைகள் செயற்திடத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முறையே ரூபா 8.31 மில்லியன் மற்றும் ரூபா 11.66 மில்லியன் நேரொத்த சான்றுபடுத்திய சிவில் வேலைகளின் பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | முழு அவசியமான சீராக்கல்களும் 2019 இல் செய்யப்பட வேண்டும். | காலரீதியான வழியில் உள்ளக பதிவெடுகளை இணக்கம் செய்வதற்கு கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதை நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது நுவரெலியா, கேகாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, இரத்தினபுரி, பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் பயிற்சி மற்றும் நீர் தர அளவையிடல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்பவற்றின் ஊடாக நகர, கிராமிய மற்றும் தோட்ட நீர் வழங்கல் மற்றும் கிராமிய திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல், தேசிய சமுதாயத்தின் நீர் வழங்கல்

திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் என்ற பெயருடைய 04 கூறுகளை கொண்டுள்ளது. பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் | | தாமதமான நாட்கள் | விளைவு | தாமதத்திற்கான காரணம் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | அடையப்பட்டது | | | | |
| | % | % | | | | |
| கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் | 92 | 43 | 60 | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு காலரீதியான வழியில் அடையப் பட்டிருக்கவில்லை. | குழாய்கள் மற்றும் பொருத்திகளின் இறக்குமதி மற்றும் வழங்கலிலுள்ள தாமதம், நாணய மாற்று வீதங்களின் கிரய தளம்பல்கள் காரணமாக, உள்நாட்டு வர்த்தக வங்கிகள் மூலம் வங்கி மேலதிகப் பற்று வசதியினை பெறல் போன்ற காரணங்கள் சிவில் நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கலில் தாமதங்களை விளைவித்திருந்தது. | நிறைவேற்றல் முகவர் உரிய காலத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு திறைசேரியின் ஆலோசனையுடன் ஒப்பந்தகாரர்களிற்கு தொடர்புகளை வழங்குவதற்கு முன்னரே நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நாவகடடோரா கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 85 | 334 | | | |
| முத்துரட்ட வட்டகேபெட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 45 | 28 | | | |
| எடின்புராஜ் நீர் வழங்கல் திட்டம் | 91 | 91 | 294 | | | |
| மந்த்ரீதென்ன கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 67 | 387 | | | |
| லின்சீ கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 55 | 03 | 251 | | | |
| அன்டேட்டிக்கம கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 76 | 381 | | | |
| டெயன்வல கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 89 | 210 | | | |
| மீயன்னவிட்ட நீர் வழங்கல் திட்டம் | 70 | 18 | 81 | | | |
| ஹக்வெல்லவக கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 65 | 57 | | | |
| கீரிகென நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் | 100 | 17 | 92 | | | |
| தெலிகம கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 30 | 322 | | | |
| பன்னகர் பத்திபுரம் நீர் வழங்கல் திட்டம் | 73 | 20 | 72 | | | |
| தட்டுவன்கொட்டி நீர் வழங்கல் திட்டம் | 75 | 62 | 205 | | | |
| மலையாளபுரம் கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 46 | 34 | 60 | | | |
| கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி – கிளிநொச்சி | 100 | 40 | 420 | | | |
| புதுக்குடியிருப்பு நீர் வழங்கல் திட்டம் | 100 | 33 | 50 | | | |

| | | | |
|---|---|---|---|
| ஒட்டிசுட்டான் கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 78 | 199 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி – முல்லைதீவு | 100 | 31 | 410 |
| வெலிப்போதாய கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 90 | 207 |
| மாதம்பே கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 86 |
| தொம்பகஸ்வேவா கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 72 | 102 |
| அபகஹயாய கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 75 | 22 |
| துரகந்த மற்றும் இணைந்த கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 85 | 22 |
| சூரியாய கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 84 | 293 |
| பல்லனோயாய நீர் வழங்கல் திட்டம் | 80 | 42 | 91 |
| பீலிகட்டுகல கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 73 | 24 | 365 |
| கரண்டுகன்டுல கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 65 | 182 |
| இதக்கட்டுவல நீர் வழங்கல் திட்டம் | 35 | 25 | 22 |
| மரியாறவ நீர் வழங்கல் திட்டம் | 100 | 55 | 60 |
| சமாகிரிபுர கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 70 | 45 | 170 |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி மாவட்டத்தில் வெலிப்பொதயாயவின் நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு மீதான ஒப்பந்தம் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக 2018 யூன் 20 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான | 1) ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம்.<br><br>ii) விடுவிக்கப்பட்ட தொழிலாரம்பிப்பு முற்பணங்களை ஒப்பந்தகாரர்கள் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் | அந்த இரண்டு ஒப்பந்தகாரர்கள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் இரண்டாவது ஒப்பந்தகாரர் வேலைகளை தொடருகின்றதுடன் 2019 ஆகஸ்ட் இறுதியளவில் பூர்த்தியாக்க | கால அட்டவணைக்குள் வேலைகளை பூர்த்தியாக்கும் நொக்கில் ஒழுங்கான கண்காணிப்பு வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேறு ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தம் குழாய்கள் வழங்கத்த தவறியமையால் 2019 மே 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | வைத்திருந்தனர். | கூடும். | |
| (ஆ) | 2018 திசெம்பர் 02 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட நுவரெலியா மாவட்டத்தில் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழான சிவில் வேலை ஒப்பந்தம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 45 சதவீதம மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், 2019 ஏப்ரல் இறுதிவரையும் அவற்றிற்காக ஒப்பந்தகாரரால் எவ்வித வெலைகளும் செய்யப்பட்டிருக்காததுடன் பல ஆண்டுகளாக ரூபா 8.84 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | தற்போது செயற்திட்ட முன்னெற்றம் 80 சதவீதத்தில் இருந்தது. வீட்டு இணைப்பு வேலைகள் தொடருகின்றன. 2019 நவம்பர் 15 அளவில் பூர்த்தியாக்க கூடும். | -மேற்படி- |
| (இ) | ஒப்பந்த திகதியிலிருந்து முறையே 09 மாதங்கள் மற்றும் 06 மாதங்களிற்கு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென முறையே கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு என்பவற்றில் கழிவு சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாண வேலைகளிற்கான ஒப்பந்தம் 20 மாதங்கள் தாமதப்பட்டிருந்தும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 14.8 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வைத்திருப்பதற்கு அனுமதித்து 03 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | பொருத்தமான மண் குறைபாடு காரணமாகவும நோக்கங்களிற்காகவும் பாதகமான காலநிலை காரணமாகவும் கடனளிக்கும் முகவரால் தாமத இடையூறு காரணமாக நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மொனறாகலை மாவட்டத்தில் பெல்லனோயா, இடக்கட்டுவ, பெல்லெகட்டுவ நீர் வழங்கல் மற்றும் மரியறவ நீர் வழங்கல் செயற்திட்டங்கள் என்பவற்றின் கீழான நிர்மாண வெலைகளை ஒப்பந்தத்தின் கீழான எவ்வித வேலைகளின் நிறைவெற்றாமை தகராறு காரணமாக பூர்த்தியாக்குவதற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமான 2019 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (உ) | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டங்களின் பிரகாரம், கிராமிய மற்றும் தோட்டத்துறை நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் 14,306 மலசலகூடங்கள் நிர்மாணக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட செயற்பாடுகளின் 03 ஆண்டுகாலப்பகுதியின் இறுதியில் 8,084 மலசலகூடங்களின் நிர்மாண வேலைகள் மாத்திரம் பூர்த்தியாகப்பட்டிருந்தது. மேலும், நுவரெலியா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த 1,164 மலசல கூடங்களில், மீளாய்வாண்டின் இறுதியில் 724 மலசலகூடங்களின் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது | -மேற்படி- | மலசல கூட நிர்மாண வேலைகளின் முன்னேற்றம் கேள்வி அளவுகள் மற்றும் சமுதாய பொறுப்பக்கள் என்பவற்றில் இருந்தது. ஆகவே, சுகாதார கூறின் ஆரம்ப நடைமுறைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தத து. | |

## 3.3 வேலைத்தளங்களில் செய்யப்பட்ட அவதானிப்புகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| டொம்பஸ்கஸ்வின கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 880,866 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட 8800 மீற்றர் பிவீசீ குழாய்களில் 2347 மீற்றர் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் சமுதாய வளவு உள்ளடங்கலாக பல இடங்களில் பயன்படுத்தப்படாத குழாய்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | சொத்தக்களில் வெடிப்பு ஏற்படல் மற்றும் தவறாக பயன்படுத்தம் சாத்தியம் உள்ளது. | இது செயற்திட்டத்தின் வெலைத்தளத்திற்கு நுழைவு வீதிகள் இன்மையால் மிகவும் கடினமாக இருந்தது. வேலைகளை விரைவாக பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருட்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவை. |

## 3.4 குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது நுவரெலியா மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களிற்கு 2018 திசெம்பர் 31 வரை ரூபா 35,145 மில்லியன் தொகை விடுவித்திருந்ததுடன் மலசல கூடங்கள் நிர்மாணிப்பதற்கு நலனாளிகளிற்கு இடையில் ரூபா 28.20 மில்லியன் பங்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகவே, குறித்த நொக்கத்திற்கு பயன்படுத்தாமல் ஒரு அண்டிற்கு மேலாக கூட்டுறவுச் சங்கங்களின் கையில் ரூபா 4.41 மில்லியன் தொகை இருந்தது. மேலும், பெருந்தோட்ட துறையில் அமுலாக்கல் ஆதரவினை பெறும் நொக்கில் செயற்திட்டத்தால் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புடன் உடன்படிக்கையொன்று | நிதிகளை தவறாக பயன்படுத்தம் சாத்தியம் உள்ளது. | பெருந்தோட்டப் பகுதியில் நிதிப் பாய்ச்சல் பொறிமுறை தோட்ட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மற்றும் தோட்ட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து நலனாளிகளிற் நிதிகளை மீள ஒதுக்க வேண்டியிருந்தது. காசுப்பாய்ச்சல் பொறிமுறை ஆய்வின் பின்னர், முன்யை செயற்திட்டங்கள் தோட்ட நலனாளிகளிற்கு பகிரப்பட்ட பணம் குறித்த நொக்கத்திற்காக பயன்படுத்தாத ஆபத்து இருந்தது என கண்டுபிடிக்கப்பட்டது. இதில், தோட்ட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | உரிய நலனாளிகளிற்கு கூட்டுறவுச் சங்கத்தின் கையிலுள்ள நிதிகளை பகிர்வதற்கோ அல்லது அறவிடுவதற்கோ உடனடியாக நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருந்ததுடன் 2017 யூன் 30 இல் உடன்படிக்கை காலாவதியாகியிருந்தது. | | அவர்களுடைய ஒப்பந்தகாரர் ஊடாக நிர்மாண வேலைகளை கையேற்றிருந்தது. | |
| (ஆ) | ரூபா 4.23 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிற்கு மாவட்ட ஆதார பிரிவால் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், வாகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட இன்னொரு 06 மோட்டார் வாகனங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிரந்தது. | வெளித்தரப்பினருக்கு செயற்திட்டத்தின் சொத்துக்களை பயன்படுத்தவதற்கான சந்தர்ப்பத்தை அனுமதித்தல். | மோட்டார் வாகனங்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமுலாக்கல் தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்க சொந்தமான சொத்தக்களை கண்காணிப்பதற்கு பொறிமுறையொன்று தாபிக்கப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்டமானது வெளிநிறுவனங்களின் 199 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 59.20 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்டவற்றில் 40 ஏழியர்கள் படவரைஞர், வேலைத்தள மேற்பார்வையாளர் மற்றும் கணக்குப் பதிவாளர் போன்றவாறு முகாமைத்தவ சேவைகள் | வேதனங்கள் மற்றும் படிகள் கொடுப்பனவு மீதான கட்டுப்பாடு நலிவாக இருக்கும். | செயற்திட்டமானது 120 உப செயற்திட்டங்கள் மற்றும் 200 புனரமைப்புச் செயற்திட்டங்களின் வடிவமைப்புகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சுகாதார கூறின் மீதான மீள் ஒதுக்கீடு காரணமாக செயற்திட்டங்கள் 07 பொதுமக்கள் இடையூறு நியைங்கள், 42 பாடசாலை சுகாதார வேலைகள், 400 பெண் குடும்ப தலைவி சுகாதாரம் மற்றும் சுகாதாரதிற்கு இயலக்கூடிய வித்தியாசமான 100 இற்கு அதிகமானவை என்பனவற்றினை வடிவமைத்திருந்தது. அதில் சில செயற்திட்டத்தின் | முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான தேவை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத 08 பதவிகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | அமுலாக்கல் கட்டத்தில் இனங்காணப் பட்டிருக்கவில்லை. ஆகவே, காலத்திற்கு காலம், மேலதிக உத்தியோகத்தர் தேவை கடனளிக்கும் முகவரால் இனங்காணப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக உரிய அமைச்சின் 02 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள் பகுதி நேர அடிப்படையில் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் எவ்வித செயற்திட்ட நடவடிக்கைகளின் பங்குபற்றலிலும் செயற்பட்டிருக்கவில்லை. | பாரதூரமான இழப்பு விளைவிக்கும் | அவர்கள் செயற்திட்ட வேலைத்தளங்களில் ஈடுபட்டிருந்ததுடன் செயற்திட்ட நிகழ்ச்சிகள் மீதான அறிக்கையும் சமர்ப்பித்திருந்தனர். | கண்காணிப்பு பொறிமுறையை தாபிக்க வேண்டிய தேவை. |